**தமிழ்நாடு அரசு**

**சுருக்கம்**

வேளாண்மை - தமிழ்நாடு தென்னை மேம்பாட்டுக் குழுமம் (Tamil Nadu Coconut Development Authority) உருவாக்குதல் - ஆணை வெளியிடப்படுகிறது.

---

**வேளாண்மை (எ.வி.) துறை**

அரசாணை (நிலை) எண் 308 நாள் 08.08.2000

படிக்க

வேளாண்மை இயக்குநர் கடித எண் எவிதெ1/96846/2000, நாள் 7.6.2000.

<u>ஆணை</u>

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 4.4.2000 அன்று சட்டமன்றப்பேரவையில் 2000-2001 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்ட விவதத்திற்குப்பதில் அளிக்கும்போது வேளாண்மைத் துறையைச் சார்ந்த கீழ்காணும் அறிவிப்னை வெளியிட்டார்கள்.

தமிழகத்தில் மொத்தம் 8 இலட்சத்து 75 ஆயிரம் ஏக்கர் பரப்பில் தென்னை சாகுபடி செய்யப்படுகிறது. அத்துடன், ஆண்டு தோறும் 7 ஆயிரம் ஏக்கர் அளவிற்கு தென்னை சாகுபடி பரப்பு அதிகரித்துக்கொண்டு வருகிறது. தென்னை உற்பத்தியில் இந்தியாவிலேயே கேரளத்திற்கு அடுத்து தமிழகம் இரண்டாம்இடத்தை வகிக்கிறது. இதனைக் கருத்திற்கொண்டு தமிழ்நாட்டிலேயே உள்ளதென்னை மரங்களைநோயிலிருந்து காலத்தே காப்பாற்றவும், தென்னைசாகுபடியை மேம்படுத்தவும்,தென்னை சாகுபடி செய்யும் விவசாயிகளுடைய நலனைக் கருத்தில் கொண்டும் தென்னைசார்ந்த உபதொழில்களை ஊக்குவிக்கவும், 12.3.2000 அன்று விவசாயிகள் சங்கப் பிரதிநிதிகள் கூட்டத்தில் என்னிடம் வைக்கப்பட்ட

கோரிக்கையையொட்டியும் தமிழ்நாடு தென்னை மேம்பாட்டுக் குழுமம் (Tamil Nadu Coconut Development Authority) உருவாக்கப்படும்.

2. தமிழ்நாட்டில் எக்டர் ஒன்றுக்கு 11,620 தேங்காய்கள் உற்பத்தி செய்யப்பட்டு தேங்காய் உற்பத்தித்திறனில் தமிழகம் நாட்டிலேயே முதலிடத்தைவகிக்கிறது. ஒரு வருடத்திற்கு 3716 மில்லியன் தேங்காய்கள் உற்பத்தி செய்யப்பட்டு தேங்காய் உற்பத்தியில் இந்தியாவில் கேரளாவிற்கு அடுத்து தமிழகம் இரண்டாவது இடத்தை வகிக்கிறது. தென்னைப் பயிர் பொருளாதார முக்கியத்துவம் பெற்றிருந்தாலும் தென்னையைப் பாதித்துள்ள பூச்சிகளைக் கட்டுப்படுத்துதல் மற்றும் தேங்காயின் நிரந்தரமற்றவிலை ஆகியவற்றை குறித்து நடவடிக்கை எடுக்கவேண்டியது அவசியமாகிறது. எனவே, தேங்காய் மற்றும் தென்னை உபபொருட்களைப் பதப்படுத்துதல், சேமிப்பு வசதிகள், விற்பனை யுக்திகள், பொருட்களைப்பிரித்தல் (Product diversification) விலைக் கொள்கையை உருவாக்குதல், தரம் உறுதி செய்தல், வியாபார வரையறைகள் ஏற்றுமதி மற்றும் இறக்குமதிக் கொள்கை, உயிரியல் தொழில்நுட்ப கண்டுபிடிப்புகளை ஒருங்கிணைத்தல், தொழிற்சாலை உள்ளமைப்பு ஏற்படுத்துதல், தொழில்நுட்ப மையங்களை அமைத்தல், கடன் வசதி அளித்தல், நிதிஆதார வசதிகளைக் கண்டறிதல் மற்றும்பயிற்சி அளித்தல் போன்றவற்றை அடிப்படை நோக்கங்களாகக் கொண்டு தமிழ்நாடு தென்னை மேம்பாட்டுக் குழுமத்தை அமைக்கலாம் என்று அரசு கருதியுள்ளது.

3. மேற்கண்டநோக்கங்களை அடிப்படையாகக்கொண்டு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பின் அடிப்படையில் மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் அவர்கள் தலைமையில் கீழ்க்கண்ட உறுப்பினர்களைக் கொண்ட தமிழ்நாடு தென்னை மேம்பாட்டுக் குழுமம் (Tamil Nadu Coconut Development Authority) ஒன்றினை உருவாக்கி அரசு ஆணையிடுகிறது.

| | |
|---|---|
| 1. மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் | தலைவர் |
| 2.செயலர்,வேளாண்மைத் துறை | உறுப்பினர் |
| 3.செயலர், நிதித்துறை (அல்லது) அவரால் நியமிக்கப்பட்ட அலுவலர் | உறுப்பினர் |
| 4.கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் | உறுப்பினர் |
| 5.வேளாண்மை விற்பனை இயக்குநர் / ஆணையர் | உறுப்பினர் |
| 6.தொழில் மற்றும் வணிக இயக்குநர் / ஆணையர் | உறுப்பினர் |
| 7.தமிழ்நாடு வேளாண் பல்கலைக் கழக தென்னை ஆராய்ச்சி மைய இயக்குநர் | உறுப்பினர் |
| 8.கொச்சியில் உள்ள தென்னை வளர்ச்சி வாரியத்தின் பிரதிநிதி | உறுப்பினர் |

9.வேளாண்மை இயக்குநர் உறுப்பினர்
- செயலர்

10. திரு.மா
சண்முகம், சட்டமன்ற உறுப்பினர், கிணத்துக்கடவு உறுப்பினர்

வழக்கறிஞர் தோட்டம், ஏரிபட்டி அஞ்சல், பொள்ளாச்சி,

கோவை மாவட்டம்

11. திரு.ப.
பாலசுப்ரமணியம், சட்டமன்ற உறுப்பினர், பட்டுக்கோட்டை உறுப்பினர்

ஏனாதி அஞ்சல்,பட்டுக்கோட்டை, தஞ்சை மாவட்டம்

12. திரு.இரா.
மணிமாறன், சட்டமன்ற உறுப்பினர், திண்டுக்கல், உறுப்பினர்

ஈசுவரி இல்லம், பெரியார் நகர், திண்டுக்கல்

விவசாய பிரதிநிதிகள்

13.
திரு.கே.செல்லமுத்து, கப்பல்பட்டி, தொப்பம்பட்டி வட்டாரம், உறுப்பினர்

திண்டுக்கல் மாவட்டம்

14. திரு.கே.எம்.
தங்கராஜ், எண் 25, ரத்தினசபாபதி லே அவுட், உறுப்பினர்

பி. கோட்டாம்பட்டி, பொள்ளாச்சி தாலூக்கா, கோவை மாவட்டம்

தென்னை பதப்படுத்தும் தொழில் பிரதிநிதி

16. எம்.
சின்னப்பன், 4/109, சாஸ்திரி நகர், உறுப்பினர்

ஜாகீர் அம்மாபாளையம், சேலம் 5

4. தமிழ்நாடு தென்னை மேம்பாட்டுக் குழுமத்தின் தலைமை இடம் சென்னையில் செயல்படும். குழு உறுப்பினர்கள் பயணப்படி மற்றும் தினப்படி பெரும்பொருட்டு இக்குழு முதல்நிலைக் குழுவாகக் கருதப்படும்.

5. இவ்வரசாணை நிதித்துறையின் ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது. (நிதித்துறை அ.சா.எண் 247/இ.செ.(பி)/2000-1, நாள் 8.8.2000.

(ஆளுநரின் ஆணைப்படி)

நா. ஆதிமூலம்

அரசு செயலாளர்.